முருகப்பெருமான் துணை

**மகான் யூகிமுனிவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.08.2023**, செவ்வாய்கிழமை

1. தானபலம் தந்தருள வந்த
   தவராஜனே சற்குருவே
   ஞான தேசிகனே அரங்கனே
   ஞாலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது யாளி திங்கள்
   குறைவிலா பஞ்சதிகதி குசன் வாரம்
   (சோபகிருது வருடம் ஆவணி மாதம் 05 ம் நாள், 22.08.2023, செவ்வாய்கிழமை)
   தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
   தேசிகன் வழி உலகம் நலமுற
3. நலமுற யூகிமுனிவரும் உரைப்பேன்
   ஞானமாக அரங்கன் தந்து
   வலம்வரும் சுத்த சன்மார்க்கமே
   வையகம் தேற்றும் மார்க்கமாகும்
4. ஆகவே கலிவாழ் மக்கள்
   அழியாமை எனும் ஞானம்
   வகையாகப் பெற்றுத் தேற
   வணங்கி அரங்கன் குடில் நோக்கி
5. நோக்கித் தொடர வேணும்
   நீயே ஆறுமுகனார் என
   ஆக்கம் தரும் அரங்கமகான்
   அடிபணிந்து தீட்சை ஏற்று
6. ஏற்றுமே வாராந்திர மாதாந்திர
   இடைவிடா தொடர் தரிசனம்
   ஆற்றல் கூடிட கண்டு நன்கு
   அறமாம் அன்னதான நெறி

7. நெறிமுறை தொடர்ந்து செய்ய
நிதியும் நீதியும் தா என
அறிவுத் தெளிவுத் திடமும் பெற
ஆற்றல் தா என வேண்டிவர
8. வேண்டிவர வினை ஒழியும்
விடாதுவர ஞானம் மிகும்
தொண்டரென அடையாளமிட்டு
தேசிகன் உள்ளம் மகிழ
9. மகிழவே மகா தொண்டாற்றிவர
மாதவப் பலனாக வரம்
மிகுதிபட வந்தடைந்துமே
மேலவர்கள் மெச்சும் மக்களாக
10. மக்களுள் சிறந்தவர்களாக
மகான்களே தேடி வந்து
தேக்கமின்றி அருளி காக்கும்
தெய்வ சக்திகளாக மாறுவர்
11. மாறவே உலக மாற்றமாக
மகான்களாகத் தெளிந்தவர்கள்
அறமுடன் ஆள வழிபிறக்கும்
அருளிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—